

Vol.27 | No. 11 | November 2023

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்




Legion of Mary, Rosary Procession Athencode to Padanthalumoodu, 2023 **October 29**




St. Vincent de Paul Society - Cleaning camp at DNN, Karode 2023 October 02



Mathru Jyothis - Competitions at Padanthalumoodu, 2023 October 02



Pastoral Visit at DNN, Karode 2023, October 04



Foundation Stone Laid for the Community Hall at Kayathar, 2023 October 06




KKSSS - One day Seminar on Mental Health at Kalluvilai, 2023 October 07



Tenkasi Mission - Rosary Procession, 2023 October 08



Tenkasi Mission - Foundation Stone Blessing, 2023 October 08



KKSSS - Medical Camp at Kalluvilai 2023 October 11



Chapel Blessing, Kozhipporvilai, 2023 October 11

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No : 11 NOVEMBER 2023



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

Bishop's Message 02
மறைக்கல்வி 07
குழந்தை ஈசோ இயக்கம் 11
பேரருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல் 13
இளையோர் இயக்கம் (SMYM) 15
இல்வாழ்வு இயக்கம் 17
வின்சென்ட் தே பவுல் சங்கம் 19
கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் 21
நலவாழ்வு பணிக்குழு 23
புலரி சமூக சேவை சங்கம் 24
மரியாயின் சேனை 25
மறைமாவட்ட செய்திகள் 26
தென்காசி மறைபரப்புதள செய்திகள் 28
மறைவட்ட செய்திகள் 29
MONTHLY AGENDA - October 2023 37
BISHOP'S ENGAGEMENTS 39

Editorial Board
Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Associate Editors
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
DTP & Design
**M.R.Merin Sujith**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests.GR.151.2023**

**31 October 2023**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckaly!

In this circular, I want to reflect with you on the significance of the family in the life of the Church and the role of priests in the pastoral care of families.

The Catholic Church considers the family to be the first natural society. It is the foundation of society and is central to all social life. It is a place where different generations live together and experience affection,

solidarity, appreciation, unselfish commitment, help, and justice. Every person is loved, just as he is. Indeed, the Universal Declaration on Human Rights, Article 16, states that 'the family is the natural and fundamental group unit of society and is entitled to protection by society and the State.'

God created us as social beings so that no person would have to live alone. Human beings are by very nature designed for family. Adam was incomplete until Eve was created, and they became 'one flesh.' They are then expected to be involved in the work of procreation when God instructs them to "be fruitful, multiply, and fill the earth."

It is in the family that the mutual giving of self on the part of man and woman united in marriage creates an environment of life. In his Centesimus Annus, St John Paul II says that it is in such an environment that the children can "develop their potentialities, become aware of their dignity, and prepare to face their unique and individual destiny." He continues: "The first and fundamental structure for 'human ecology' is the family, in which man receives his first formative ideas about truth and goodness and learns what it means to love and to be loved, and this is what it actually means to be a person."

We need to affirm the priority of the family over society and the State. The family does not exist for society or the State, but society and the State exist for the family. This is clearly stated in Familiaris

Consortio. St John Paul II writes: "In virtue of the principle of subsidiarity, public authorities may not take away from the family tasks which it can accomplish well by itself or in free association with other families; on the other hand, these same authorities have the duty to sustain the family, ensuring that it has all the assistance that it needs to properly fulfil its responsibilities."

Speaking about the mission of the Christian families, St John Paul II, in his Evangelium Vitae, nos. 507–508, has this to say: "Christian families have a particular mission to be witnesses to and proclaimers of the Gospel of Life. By serving the gospel of life, the family works to ensure that the laws and institutions of the state in no way violate the right to life, from conception to natural death, but rather protect and promote it."

Further, through the creation of new life, families contribute to the 'communion of generations' and, in this way, provide essential and irreplaceable support for the development of society. For this reason, the family has a right to assistance from society in the bearing and rearing of children. Those married couples who have large families have a right to adequate aid and should not be subjected to discrimination.

Nowhere are children raised better than in a culture of family life based on high ideals and good relationships. It is in the family that individuals can show and learn that mutual respect, justice, dialogue, and love are more important than anything else for successful coexistence. Hence, the family has a completely original and irreplaceable role in raising children. Parents' love, placing itself at the service of children to draw forth from them the best that is in them, finds its fullest expression precisely in the task of educating. The right and duty of parents to educate their children is essential, and it is incapable of being entirely delegated to others or usurped by others.

Parents have certain rights and duties. They have the duty and right to impart a religious education and moral formation to their children, a right the State cannot annul but must respect and promote. This is a primary right that the family may not neglect or delegate. They have the right to found and support educational institutions, and public authorities must ensure that public subsidies are allocated so that parents are free to exercise this right without incurring unjust burdens.

Parents must work together in the education of their children and exercise their authority with respect and gentleness but also, where necessary, with firmness and vigour; it must be consistent, credible, and wise and always exercised with a view to the children's integral good.

They have a particular responsibility in the area of sexual education, and this must be done in an orderly and progressive manner so that children learn to appreciate the human and moral values connected with it. Parents also must inquire about the methods used for sexual education in educational institutions to verify that such an important and delicate topic is dealt with properly.

To realise all these ideals of families and to help the parents be faithful to their duties and enjoy their rights, we need pastors after the heart of Christ to be at the service of building up Catholic families. Pastoral care of families forms an integral duty of every priest, especially those who work in parishes. Just as God accompanies humans through his presence and his grace, the priests need to accompany the families.

However, we need to heed the pastoral challenges associated with accompanying Christian families that Pope Francis lists in his Apostolic Exhortation Amoris Laetitia. The first challenge is to come to a new understanding of pastoral care for families, which should primarily include parishes and the families that belong to them. The second challenge is pastoral concern for couples, their bond of marriage, and the maturation of marital love. The third challenge involves helping married couples with the spiritual life of their families. The fourth and final challenge is accompanying divorced people who are living in new unions and helping them to discern their moral responsibility, which will enable them to interpret God's teaching and seek the path to reconciliation with God and the Church.

To overcome these challenges, we can always fall back on our traditional methods of pastoral care for families, which are time-tested and very effective. The earlier missionaries had recourse to them with great success and efficacy. Among them, the most important method is regular family visits to maintain contact with people. Getting to the families and the people and making oneself available for service to them, especially in times of illness and misfortune, are important in sustaining the faith of the people. Striking up personal contacts is necessary for nurturing faith in people. The willingness of the pastors to listen to the people is essential. These visits shower on the pastor, appreciation and affection. He becomes a welcoming person. This also bestows on him a certain prestige, which can be admirably used in catechising the people. Travelling on foot wherever possible is beneficial, as it gives the pastor numerous opportunities to meet people. A pastor should never be in a hurry to reach his destination, especially when he is on pastoral duty. Every individual he meets on his way should indeed

become his destination. Thus, meeting people and visiting their homes are important for the pastoral care of the families.

Speaking about their importance in the evangelising work, especially in parishes, Most Rev. Thomas Menamparampil, Archbishop Emeritus of Guwahati, writes: “Those priests who were capable of greater warmth or great intensity of human relationships, other qualities not wanting, worked the bigger miracles. Here we are not referring to some superficial etiquette or surface cordiality but to a deeper level of human ties based on dedication, service, and sacrifice, virtues that plunge the pastor into all kinds of activities and undertakings on behalf of the people with whom he has cast his lot and has come to identify himself in his aspirations, ambitions, and desires.”

Another important method for evangelizing families is family catechesis. Here, the role of the pastor is critical to its implementation. The pastors have a serious obligation to assist parents and educators in their mission to pass on the faith to future generations. The family catechesis should bring parents and children together to pray, learn the truths of the Catholic faith, and understand and celebrate the sacraments and liturgy. It provides an opportunity for all members of the family, including the extended family, to engage in the process of passing on the teachings of Christ.

It includes the development of a personal relationship with him, enabling the family to become “living stones” that build up the people of God. As pastors, the priests must be at the centre of catechesis, initiating the members of families to faith, celebrating the sacraments to nourish their faith, and enabling them to become a leaven in society. In this way, the priests can help the families in their mission as a ‘Church of the home.’

The priests also need to reach out to the less advantaged people in society. Their visits provide the blessings of the Eucharist and a warm outreach to those who are shut-in, sick, or lonely. They need to focus on listening, praying, and caring. We visit those who are home-bound or needing special assistance, those in hospitals and assisted living facilities, and families with special needs.

In his message for the launch of the Family Global Compact issued on 2 June 2023, Pope Francis said: “It is in the family that many of God’s dreams for the human community are realized. Hence, we cannot resign ourselves to the decline of the family in the name of uncertainty, individualism, and consumerism, which envision a future of individuals who think only of themselves. We cannot be indifferent to the future of

the family as a community of life and love, a unique and indissoluble covenant between a man and a woman, a place where generations meet, and a source of hope for society. The family, it should be recalled, has a positive effect on everyone since it is a generator of the common good. Healthy family relationships represent a unique source of enrichment, not only for spouses and children but for the entire ecclesial and civil communities."

Let us listen to the admonition of our Universal Pastor and make our family apostolate more vibrant and effective in reaching out to everyone in our Eparchy!

As we conclude the month of October, a month during which we honoured our Blessed Mother through the recitation of the Holy Rosary, let us ask her to intercede for all the intentions of our Eparchy. With the celebration of the 27th Foundation Day of our Eparchy coming near on 11 November 2023, let us now redouble our efforts at building up the kingdom of God with greater commitment and fervour.

Yours in Christ Jesus,




☨ George Rajendran SDB



Bishop of Thuckalay

---

## மறைமாவட்ட கூரியா செய்திகள்

- அருட்தந்தை சுபின் ஸ்கரியா அவர்கள் மஞ்சாலுமூடு மறைவட்ட SMYM மற்றும் இல்வாழ்வு இயக்க இயக்குநரிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் மஞ்சாலுமூடு மறைவட்ட இல்வாழ்வு இயக்க இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் மஞ்சாலுமூடு மறைவட்ட SMYM இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் தெற்றியோடு புனித பவுல் ஆலய பொறுப்பு பங்குதந்தையாக 2023 அக்டோபர் 31 முதல் செயல்படுவார்.




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

*"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" [மாற்கு 16:15]*

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

**மறைவட்ட விவிலியக் கலைவிழா - எழுத்துப்போட்டிகள்**

2023 – 2024 ஆம் ஆண்டு மறைவட்ட விவிலியக் கலைவிழா எழுத்துப்போட்டிகள் 2023 அக்டோபர் 08 ஞாயிற்றுக்கிழமையன்று மஞ்சாலுமுடு, நித்திரவிளை, படந்தாலுமுடு, களியல், தக்கலை - பிலாங்காலை, சூசைபுரம் ஆகிய மறைவட்டங்களுக்கும் அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமையன்று ஆறுகாணி மற்றும் தென்காசி மறைவட்டங்களுக்கும் அந்தந்த மறைவட்டங்களில் வைத்து மறைவட்ட இயக்குநர்கள் தலைமையில் நடைபெற்றது. சப்-ஜுனியர் பிரிவு மாணவர்களுக்கு Colouring ஜுனியர். சீனியர் சூப்பர் சீனியர் பிரிவு மாணவர்களுக்கு Pencil Drawing, Senior & Super Senior மாணவர்களுக்கு Essay writing, Poetry writing போட்டியும் நடைபெற்றது. பங்களவில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெற்றனர். 7 மறைவட்டங்களிலுமாக 450 –க்கு மேல் மாணவர்கள் பங்கு பெற்றனர்.



**மறைவட்ட இயக்குநர்களின் கூட்டம்**

மறைமாவட்ட மறைக்கல்வியின் இயக்குநர் மற்றும் மறைவட்ட இயக்குநர்களின் கூட்டம் 2023 அக்டோபர் 11 வியாழக்கிழமை பிற்பகல்

2.00 மணிக்கு தக்கலை ஆயர் இல்ல அலுவலகத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் தலைமையில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அனைவரையும் வாழ்த்தி வரவேற்று பேசினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் மறைமாவட்டத்தின் முக்கியமான இயக்கம் மறைக்கல்வி என்றும் மாணவர்களுக்கு இன்னும் அதிகமாக விசுவாச பயிற்சி அளிக்க வேண்டும் நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்றும் கலந்துரையாடினார். தற்போது மறைமாவட்டம் மற்றும் மறைவட்டங்களில் மறைக்கல்வி நிலையங்கள் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிய மதிப்பீடு நடைபெற்றது. மேலும் மறைக்கல்வி மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு புதிதாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தின் போது புதிதாக செயல்படுத்த வேண்டிய செயல்திட்டங்களுக்கான தீர்மானங்கள்

1. சங்ஙனாச்சேரி மறைமாநிலத்தில் ''நூறு மேனி' என்னும் தலைப்பில் விவிலிய வினாடி வினாப் போட்டி மிகச்சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் போன்று நமது மறைமாவட்டத்திலும் 'நூறு மடங்கு விவிலிய வினாடிவினாக் கொண்டாட்டம்' என்னும் தலைப்பில் விவிலிய வினாடி வினாப் போட்டிகள் ஒவ்வொரு பங்கிலும் அனைவரும் பங்கேற்கும் வகையில் ஒரு நாள் கொண்டாட்டமாக கொண்டாடப்படவேண்டும். இப் போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற மறைமாவட்ட அளவில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பொறுப்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு.
    - அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ்
    - அருட்தந்தை சுபின்
    - அருட்தந்தை சுமேஷ்
    - அருட்தந்தை லிஜோ
    - அருட்சகோதரி ஜோதிஸ் FCC
    - அருட்சகோதரி லின்ஸ் SABS
2. இறைமக்கள் இறைவிசவாசத்தில் ஆழப்படவும். ஆன்மீகத்தில் வேருன்றி நிற்கவும் இறைமக்களை அழைப்பு விடுக்கும் கருவியாக மக்களுக்கு திகழும் வகையில் ஒவ்வொரு மாதமும் கட்டுரைகள் வெளியிடப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்திட மறைமாவட்ட அளவில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பொறுப்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு

- அருட்தந்தை அஜின் C ஜோசப்
- பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ்
- அருட்தந்தை ஷிஜோ
- அருட்சகோதரி வளனரசி SDS
- திரு. எட்வின்சன்
- செல்வன். மெரின் சுஜித்

ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**தலைமையாசிரியர்களின் கூட்டம்**

மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் 2023 அக்டோபர் 21 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் துய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் இறைவனை வெளிப்படுத்துதல் மறைக்கல்வியின் நான்கு தூண்கள்: கற்பித்தல், அப்பம் பிட்குதல், நட்புறவு, இறை வேண்டல் என்பது பற்றியும் இறைவார்த்தையை மையமாக வைத்து வகுப்பு நடத்தினார். மேலும் இக்கூட்டத்தின் போது மஞ்சாலுமுடு மறைவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் (BTCT) நவம்பர் 05 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகும் என்றும் அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் மாதத்திற்கு 2 முறை வகுப்பு வாரியாக செபம் நடத்த வேண்டும் என்றும் வருடத்திற்கு ஒரு முறையாவது மறைவட்ட அளவில் கருத்தரங்கு நடத்த வேண்டும் என்றும் கூறினார். இக்கூட்டத்தின் போது மாணவர்களின் முதல் பருவத் தேர்வுக்கான வினாத்தாள் வழங்கப்பட்டது. பின் நன்றியுரை மற்றும் செபத்துடன் 4.30 மணியளவில் இனிதே முடிவுற்றது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.



**முதல் பருவத்தேர்வு**

மறைக்கல்வி வகுப்பு ½ முதல் வகுப்பு 12 வரையுள்ள மாணவர்களுக்கான முதல் பருவத்தேர்வு அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது. வகுப்பு 10, 11, 12 ஆகிய மாணவர்களுக்கான வாய்மொழித் தேர்வு அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

**MISSION QUEST 2023**

திருச்சபை மற்றும் திருத்தொண்டு பணிகளை ஆழமாக அறிந்திட இணையம் வாயிலான வினாடி வினாப் போட்டி சீரோ மலபார் திருத்தூது நிலையம் மற்றும் சீரோ மலபார் மறைக்கல்வி ஆணையம் இணைந்து நடத்திய MISSION QUEST – 2023 நற்செய்தி நிலையத்தின் வாயிலாக 2023 அக்டோபர் 28 சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு இணையம் வாயிலாக 45 நிமிடங்கள் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் பெரியோர்கள் என இரு பிரிவுகளாக வழங்கப்படும். ஊலகளாவிய சீரோ மலபார் திருச்சபை அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு – 10000, இரண்டாம் பரிசு – 5000, மூன்றாம் பரிசு -3000 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். இப்போட்டியில் மறை மாவட்டத்தின் சார்பாக மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் பெரியோர்கள் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**போட்டியில் மறைமாவட்ட அளவில் மாணவ மாணவிகள் பிரிவில் வெற்றிபெற்றவர்கள்**

1. Jeswin S - St. Joseph Church , Soosaipuram
2. Jerisha J - St. Micheals Church, Kattathurai
3. Rithik Roshan R- St. Micheals Church, Kattathurai

பெரியோர்கள் பிரிவில் வெற்றிபெற்றவர்கள்

1. Sr. Annie Pavana CMC - St. Thomas Church, Muzhucode
2. Fr. Dency Mundunadackal - St. Little Flower Church, Puliyarai
3. Maria - St. Little Flower Church, Puliyarai

பங்கு பெற்ற அனைவருக்கும் நற்செய்தி நிலையத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குநர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குநர்***

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

*"கடவுளிடம் அன்பு செலுத்துகிறவரைச் கடவுள் அறிவார்" [1 கொரிந்தியர் 8:3]*

குழந்தை ஈசோ இயக்கத்தில் ஒவ்வொரு மாதமும் மறைமாவட்ட அளவில் ஏராளமான செயல்பாடுகள் செய்து வருகிறோம். அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு குழந்தைகள் ஜெபமாலை சொல்ல பயிற்றுவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆலயங்களிலும் ஆசிரியர்களும், குழந்தைகளும் இணைந்து ஜெபமாலை சொல்லி அழியாத பொருட்களைக் கொண்டு ஜெபமாலை செய்தனர். செய்த செபமாலையை அலுவலகத்தில் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.

**ஆயருடன் சந்திப்பு**

13-10-2023 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மறைமாவட்ட மற்றும் மறைவட்டப் பொறுப்பாளர்கள் இணைந்து ஆயர் அவர்களைச் சந்தித்து, குழந்தை ஈசோ இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. கடந்த மாதம் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றவர்களின் பெயர்கள்

| | Competition | Winners |
|---|---|---|
| Arukani | Drawing - July | Subith. - St.Thomas Church, Pathukani<br>Riyona - St.Francis Church, Mezhakode<br>Abhishek - Holy Family Church, Arukani |
| | Mother Mary Video - August | Alaana- St.Thomas Church, Pathukani<br>Abhishek - Holy Family Church, Arukani<br>Meera - St.Thomas Church, Netta |
| Manjalumoodu | Drawing - July | Alka. - Holy Family Church, Mukkoottukal<br>Annshina Cathryn - St.Thomas Church,. Muzhucode<br>Abiroopa - Holy Cross Church, Malaicode |
| | Mother Mary Video - August | Annshina Catherin - St.Thomas Church,. Muzhucode<br>Ajolin Annie - St.Thomas Church,. Muzhucode<br>Abarjith - Holy Cross Church, Malaicode |

| | | |
|---|---|---|
| Nithiravilai | Drawing - July | Angel Gladisha - St. George Church, Munchirai<br>Benefia - St. Antony's Church, Vayalinkarai<br>Adan Alro - Jaya Matha Church,, Nithiravilai |
| | Mother Mary Video - August | Jafiya J - St. Antony's Church, Vayalinkarai<br>Benefia Bs - St. Antony's Church, Vayalinkarai<br>Ajolinjismi - Amala Maria Church, Cheenivilai |
| Padanthalumoodu | Drawing - July | Denistan Jino - Sacred Heart Church, Padanthalumoodu<br>Ajin - St.Martin De Porres, Kazhuvanthittai<br>Sharmini - Sacred Heart Church, Padanthalumoodu |
| | Mother Mary Video - August | Abina - St.Paul Church, Thettiyode.<br>Alaina Ruth - St.Mathew Church, Annikkarai.<br>Jobisha. - Sacred Heart Church, Padanthalumoodu. |
| Soosaipuram | Drawing - July | Blesslin - St.James Church, Mankarai<br>Riyashi Lanshiya - Loretto Matha Church, Pilankarai<br>Bibisha - Fathima Matha Church, FathimaNagar |
| | Mother Mary Video - August | Bibisha - Fathima Matha Church, FathimaNagar<br>Aaric Joel - St.Joseph Church, Soosaipuram<br>Jona - St.Thomas Church, Mathapuram |
| Thuckalay- Pilankalai | Drawing - July | Abhishek - St.Alphonsa Church, Nagercoil<br>Deena Dennis Joy - St.Alphonsa Church, Nagercoil<br>Rexlin Benika - Christ The King Church, Paraicode |
| | Mother Mary Video - August | Jefrina Catherin - Little Flower Church, Pilankalai<br>Sumitra - St.George Church, Anayadi<br>Ashmika - St.Xavier Church, Kaisalavilai |

| | | |
|---|---|---|
| Kaliyal | Drawing - July | Jefrona - Sacred Heart Church, Pallikkonam<br>Arshika - St.Thomas Church, Marappadi<br>Niranchana - St. Mary's Church, Kaliyal |
| | Mother Mary Video - August | Melbin - Sacred Heart Church, Pallikkonam<br>Shakshika. - St.Thomas Church, Marappadi<br>Jefrona - Sacred Heart Church, Pallikkonam |
| Shenkottai Mission | Drawing - July | Sharandas. - Little Flower Church, Puliyarai<br>Jansi. - Annai Teresa Church, Sundarapandiyapuram<br>Frakles - Little Flower Church, Puliyarai |

***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குநர்***

# தொடக்ககால மறைபரப்பு பணியாளர்

## பேரருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குன்னேல்

**"அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள் (உரோ 10:15)"** என்னும் இறைவார்த்தைக்கு ஏற்ப குமரி மண்ணில் நற்செய்தி அறிவிக்கப்பட அனுப்பப்பட்ட சங்ஙனாச்சேரி மறை மாநில அருள் தந்தையர்களில் இரண்டாமவர், அருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குன்னேல் அடிகளார் ஆவார். கேரளா மாநில காஞ்சிரப்பள்ளி -- பொன்குந்நம் பங்கில் திரு. மத்தாய் திருமதி. மரியம் தம்பதியருக்கு மகனாக 21.09.1930 இல் பிறந்தார்.

**"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன"** என்னும் இறை வார்த்தையை உள்வாங்கியவராக நற்செய்தி அறிவிப்பு பணிக்காக, சங்ஙனாச்சேரி பாறேல் இளம் குருமடத்தில் தனது குருத்துவ பயிற்சியை தொடங்கி, ஆலுவா உயர் குருமடத்தில் இறையியல் பயின்று 20.12.1960 இல் குருவாக அருள்பொழிவு பெற்றார்.

தான் செல்ல வேண்டிய பயணம் கரடு முரடானது என்பதை உணர்ந்தவராய். 1961 ஜனவரி திங்கள் 14 ஆம் நாள் குமரி மிஷன்

நித்திரவிளையில் தனது குருத்துவ பணியை தொடர்ந்தார். குமரி திருத்தொண்டு தளங்களின் பயோனியர் என அழைக்கப்படும் அருட்தந்தை சக்கரியாஸ் காயத்தற அடிகளாரின் துணை பங்கு தந்தையாக பொறுப்பேற்கின்றார். அன்று தொடங்கிய அவரது ஆன்மீக பயணம் 43 ஆண்டுகளை குமரி மண்ணில் நிறைவு செய்து தனது குருத்துவ வாழ்வு முழுவதையுமே குமரி மக்களுக்காக செலவழித்தவர். குமரியில் இவர் கால் தடம் படாத இடம் இல்லை எனலாம். வாகன வசதிகள் இல்லாத காலத்தில் கால்நடையாகவும் மிதிவண்டியிலும் தனது பயணத்தை தொடங்கி பின்னாளில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தவர்.

இன்றைய தக்கலை மறை மாவட்டத்திற்கு உட்பட்ட 15 பங்குகளில் இவரது பணி நீக்கமற நிறைந்திருந்தது. குறிப்பாக நித்திரவிளை தொடங்கி சூசைபுரம், பாலப்பள்ளம், மாங்கரை, பிலாங்கரை, மஞ்சாலுமூடு, படந்தாலுமூடு, மாறப்பாடி, முக்கூட்டுக்கல், தெற்றியோடு, தக்காளிவிளை, வயலின்கரை, வாறுதட்டு, காரோடு மற்றும் பளுகல் என இவரது பயணம் ஒரு தொடர்கதை. குமரி மாவட்ட திருத்தொண்டு பணிகளின் ஒருங்கிணைப்பாளராகவும் 03.03.1997 முதல் தக்கலை மறை மாவட்டத்தின் முதல் குருகுல முதல்வராகவும் பணியாற்றினார். அத்தோடு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் தலைவராகவும் புனித வின்சென்ட் தே பவுல் சபை தக்கலை மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகராகவும் சிறப்புடன் பணியாற்றினார். வயது முதிர்வின் காரணமாக 01.03.2004 இல் சங்ஙனாச்சேரி இத்திதானத்தில் அமைந்துள்ள அருட்தந்தையர்களின் ஓய்வு இல்லத்திற்கு மாற்றலாகி சென்றார். புனித இரண்டாம் ஜாண் பால் திருத்தந்தையின் நினைவு தினமான 22.10.2023 அன்று விண்ணிற்கு பயணமானார். தடம் பார்த்து நடக்கும் மனிதர்கள் மத்தியில் தடம் பதித்து சென்ற இவரின் தடயங்கள் தக்கலை மண்ணில் என்றும் நிலையாய் நீங்க நினைவாய் நிற்கும்

## ஆழ்ந்த இரங்கல்கள்

*தக்கலை மறைமாவட்டத்தில் முன்னாள் குருகுல முதல்வராக பணியாற்றிய அருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல் அவர்கள் 2023 அக்டோபர் 22 அன்று விண்ணக வாழ்வை அடைந்தார். அருட்தந்தையின் ஆன்மா நித்திய இளைப்பாறுதல் பெற மறைமாவட்டம் சார்பாக இரங்கல்களையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்*

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### இணையவழிப் போட்டிகள்

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் பாதுகாவலர் இரண்டாம் ஜான் பால் திருவிழா மற்றும் செபமாலை மாதத்தை முன்னிட்டு மறைமாவட்ட இளையோருக்கான இணைய வழி போட்டிகள் நடைபெற்றன. அதன்படி Rosary Photography மற்றும் ஒரு நிமிட Shorts போட்டிகள் நடைபெற்றது. அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி போட்டிக்கான நேரமாக ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் சுமார் 54 இளையோர்கள் கலந்து கொண்டனர். அதில் வெற்றி பெற்றவர்கள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| **Rosary Photography** | | |
| 1st | Benish | Christ the King Unit, Palapallam |
| 2nd | Jeeshmon | St. Pauls Unit, Thettiyode |
| 3rd | Jerapin | Christ the King Unit, Palapallam |
| **One Minute Shorts** | | |
| 1st | Jerin J | Martin De Porras Unit, Kazhuvanthittai |
| 2nd | Aswani Joy | St. Mary’s Unit, Kaliyal |
| 3rd | Sharmili | St. Maria Goretti Unit, Athencode |

### பாதுகாவலர் திருவிழா கொண்டாட்டம்

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் விண்ணக பாதுகாவலர் புனித இரண்டாம் ஜான்பால் அவர்களின் திருவிழாவை முன்னிட்டு 2023 அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் பாதுகாவலர் திருவிழா நடைபெற்றது. மறைமாவட்டத்திலிருந்து கொடுக்கப்பட்ட செயல்திட்டங்களில் இருந்து செயல்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்டன.



அன்றைய நாள் காணிக்கை பவனி, விவிலிய வாசகங்கள் வாசித்தல் போன்றவற்றை இளையோர்கள் முன்னின்று வழிநடத்தினர். மேலும் மருத்துவ முகாம்கள், ஆதரவற்றோர் இல்லங்களை சந்தித்தல் போன்ற நிகழ்வுகளும் பங்களவில் நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் அந்தந்த அலகு அருட்தந்தையர்கள் வழிகாட்டுதலோடு இளையோர்கள் முன்னின்று வழி நடத்தினார்.

**Jagoo – இளையோர் தேசிய மாநாடு**

Jesus Youth தேசிய மாநாடு 2023 அக்டோபர் 21 முதல் 24 வரை பெங்களூர், தர்மராம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்தியா அளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சுமார் 18,000 பேர் கலந்து கொண்டனர். தக்கலை மறைமாவட்டம் சார்பில் அருட்சகோதரி அமலா FCC, மனோஜ், மெரின் சுஜித், அஞ்சனா மற்றும் ஜாஸ்மின் ஆகியோர் கலந்து கொண்டனர். தக்கலை மறைமாவட்டம் உட்பட 28 மாநிலங்களுக்கு எடுத்துசெல்லப்பட்ட புனித இரண்டாம் ஜான்பால் நினைவுச்சின்னமும் இந்நிகழ்வில் நிறுவப்பட்டது. இளையோர்களின் கலைநிகழ்வுகள், மாநில கலாச்சார நடனங்கள், நற்கருணை ஆராதனைகள், தனிப்பட்ட செப நிகழ்வுகள் போன்ற ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.



***இவண்***

***அகில், செயலர்***

| BIRTHDAY OF REV. FATHERS NOVEMBER - 2023 | |
|---|---|
| Fr. Martin Kandamparampil MST | 02 |
| Fr. Rocky Kulangara | 02 |
| Fr. Abilash Xaviour Raj S | 16 |
| Fr. John Thekkel | 20 |




**கதா பிரசங்கம் போட்டி மற்றும் இறைவார்த்தை எழுதும் போட்டி**

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மறைமாவட்ட அளவிலான கதா பிரசங்கம் போட்டி மற்றும் இறைவார்த்தை எழுதும் போட்டியானது 2-10-2023 அன்று இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமையில் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இப்போட்டியானது காலை 10 மணியளவில் ஆரம்பமானது. 19 பங்குகளிலிருந்து 22 குழுக்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து இறைவார்த்தை எழுதும் போட்டியானது காலை 11 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. சுமார் 70 தாய்மார்கள் கலந்து கொண்டனர். கதா பிரசங்கம் போட்டியில் பரிசு பெற்றவரின் விவரம் பின்வருமாறு.

| Sl.no | Parish name | Place |
|---|---|---|
| **A category** | | |
| 1 | St. Antony Church | Vayalinkarai |
| 2 | Christ the king Church | Paraicode |
| 3 | St. Xavier Church | Varathattu |
| 4 | Holy family Church | Thackalivilai |
| **B category** | | |
| 1 | St. Joseph Forane Church | Soosaipuram |
| 2 | St. Amala Maria Church | Cheenivilai |
| 3 | Christhuraja Church | Christhurajapuram |
| 4 | Jayamatha Forane Church | Nithravilai |
| 5 | St. Francis assisi Church | Mezhacode |
| 6 | St. Mary’s Church | Thuckalay |
| 7 | St. Thomas Church (2 groups) | Marapady |
| **C category** | | |
| 1 | St.Fathima Church | Fathimapuram |
| 2 | St. Joseph Forane Church | Soosaipuram |

| | | |
|---|---|---|
| 3 | St. James Church (2 groups) | Mangarai |
| 4 | St. Thomas Church | Palukai |
| 5 | Louthu matha Church | Chenamcode |
| 6 | Holy family Church | Mukkuttukal |
| 7 | St.Martin de pores Church | Kazhuvanthittai |
| 8 | St.Loretto matha Church | Pilankarai |
| 9 | St.Mary 's Church | Kaliyal |

அக்டோபர் 10 பிற்பகல் 3 மணியளவில் இல்வாழ்வு இயக்க பணியாளருக்கான கூட்டம் தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமை தாங்கினார். இல்வாழ்வு இயக்கத்தின் பணி விவரங்களை ஆயர் அவர்கள் கேட்டறிந்தார். பின்னர் இயக்கத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வதற்கு சில கருத்துகளை முன்வைத்தார். மாலை 4.15 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது. இதில் குருகுல முதலேவர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில், மறைமாவட்ட இயக்குநர், உதவி இயக்குநர், மறைவட்ட இயக்குநர்கள், பொறுப்பாளர்கள், இல்வாழ்வு இயக்க பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

அக்டேபார் மாதம் 5 மற்றும் 28 ம் தேதி மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான கூட்டம் கல்லுவிளை இல்வாழ்வு இயக்கம் அலுவலத்தில் வைத்து இயக்குநர் தந்தை மற்றும் அருட்சகோதரி றோஸ் சீரியன்கண்டத் CHF அவர்கள் தலைமையில் நடைபெற்றது. Smart Christmas மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

அக்டோபர் 22 ம் தேதி பிற்பகல் 2 மணியளவில் மாதர் ஜோதிஸ் பொறுப்பாளர்கள் இணைந்து சூசைபுரம், பாலப்பள்ளம் மற்றும் கிள்ளியூர் பங்கில் உள்ள மாதர் ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட்டு நிறை குறைகளை கேட்டறிந்து தாய்மார்களுக்கு வகுப்புகள் நடத்தினார்கள்.



மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மாங்கரை புனித வியாகப்பர் ஆலய மாதர்ஜோதிஸ் உறுப்பினர்கள் அக்டோபர் 1 ம் தேதி சகாயநகர் முதியோர்இல்ல முதியோர்களை சந்தித்து அவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்கள்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## துப்புரவு பணி முகாம்

தக்கலை மத்திய பேரவையின் சார்பாக "தேசத்தோடு ஒரு நாள்" என்ற மையச்சிந்தனையில் வருடம் தோறும் அக்டோபர் 2-ம் தேதி நடைபெறும் துப்புரவு முகாம் இம்முறை காரோடு தேவசகாயம் நல்வாழ்வு இல்லத்தில் வைத்து அக்டோபர் 2- ம் தேதி தலைமை பணியாளர் சகோ. றாபி அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தக்கலை மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் இந்நிகழ்வை துவங்கி வைத்தார். காரோடு பங்கின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. மத்திய சபை பொறுப்பாளர்கள் மற்றும் கிளை சபைகளிலிருந்தும் 50க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். துணை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். காரோடு கிளைச் சபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தேநீர் மற்றும் மதிய உணவை தயார் செய்து வழங்கினார்கள்.

## மஞ்சாலுமூடு வட்டார சபை ஆண்டு விழா மற்றும் வெள்ளிவிழா

மஞ்சாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழா மற்றும் ஜூபிலி விழா கொண்டாட்டமானது 8.10.2023 அன்று முழுக்கோடு புனித தோமையர் ஆலய வளாகத்தில் மதியம் 2 மணியளவில் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. கூட்டத்தில் மத்திய சபை தலைமைப் பணியாளர் சகோ. றாபி அவர்கள் தலைமை தாங்கினார்கள். அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தியான உரை நிகழ்த்தினார்கள்.



முழுக்கோடு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சந்தோஷ் CMI அவர்கள் ஆன்மீக உரையாற்றினார்கள். மத்திய சபையின் கல்வி உதவி அலுவலர் சகோ.வின்செண்ட்ராஜ் மற்றும் சகோ.வில்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். விழாவில் மூத்த வின்சென்டியர்களை கௌவுரவிக்கும் விதமாக 11 பேருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்தின் இடையிடையே கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்செண்ட் அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள்.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

---

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| அருட்தந்தையர் கூட்டம் (சூசைபுரம், தக்கலை பிலாங்காலை மறைவட்டம்) | – நவம்பர் 02 |
| மறைமாவட்ட தினம் கொண்டாட்டம் | – நவம்பர் 12 |
| அருட்தந்தையர் கூட்டம் | – நவம்பர் 21 |
| மறைவட்ட மிஷன் லீக் பேரணி | – நவம்பர் 26 |
| அருட்தந்தையர் பேரவை | – நவம்பர் 28 |

| FEASTDAYS OF REV. FATHERS - NOVEMBER 2023 | |
|---|---|
| Fr. Martin Kandamparampil MST | 03 |
| Fr. Christudhas. M | 26 |

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

**EDUCARE - தியானம்**

EDUCARE மாணவர்களின் ஆன்மீக தரத்தை அதிகப்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்குகான தியான முகாம், 2023 அக்டோபர் 22 முதல் 24 தேதி வரை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் துணை இயக்குநர் அருட்தந்தை அஜின் C அவர்கள் நிகழ்வை துவங்கி வைத்தார்கள். எல்லா நாட்களிலும் காலை திருப்பலியும் திருப்பலிக்கு பின் யோகா, சைகை பாடல், இறைவார்த்தை மனப்பாடம் செய்தல், போன்ற நிகழ்வுகளும் ஆன்மீகத்தை வளர்க்கும் கருத்துக்களும் மணவர்களுக்கு மனநல ஆலோசனை மற்றும் ஒப்புரவு அருளடையாளமும் வழங்கப்பட்டன. மாலை நேரங்களில் செபமாலையும், நற்கருனை ஆராதனையும் நடைபெற்றது. இறுதி நாளில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் பார்வையிட்டு நிறைவுரை வழங்கினார். அன்றைய தினம் EDUCARE மாணவர்களின் பெற்றோர்களுக்கான ஆன்மிக விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளை அருட்சகோதரி ரீஜா CMC தலைமையில் 6 அருட்கன்னியர்கள் வழிநடத்தினார்கள். இதில் மறைமாவட்டத்தை சார்ந்த 42 EDUCARE மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**மருத்துவ முகாம்**



மார்தாண்டம் சம்கோ கண் மருத்துவமனை மற்றும் முன்சிறை ATSVS சித்த மருத்துவகல்லூரி இணைந்து நடத்திய கண் மற்றும் சித்த மருத்துவ முகாம் KKSSS அரங்கத்தில் அக்டோபர் 10 ஆம் தேதி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமை தாங்கினார். இதில் சித்த மருத்துவக்கல்லூரி பேரா. மருத்துவர் மேரி மார்செலின் "சித்த மருத்துவம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். சித்த மருத்துவர் பேரா. சைபா தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. கண் மருத்துவ முகாம் மரு. ஜெறி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 170க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இலவச பரிசேதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 2 சித்த மருத்துவர், ஒரு கண் மருத்துவர் உட்பட 18 சித்த பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வை கல்லுவிளை, களப்பணியாளர் திருமதி சுதா அவர்களுடன் இணைந்து சுய உதவி மகளிர் ஒருங்கினைத்தார்கள்.

**தானம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், கல்லுவிளை சேனங்கோடு சுய உதவி மகளிர்கள் இணைந்து அக்டோபர் 22 தேதி அஞ்சுகண்டறை பகுதியில் நடைபெற்றது. வேலாயுதப் பிள்ளை கண் மருத்துவ கல்லூரி கண் மருத்துவர் திருமதி லதா அவர்கள் கண்தானம் பற்றிய வகுப்பை வழிநடத்தினார்கள். அப்போது கண் தானத்தின் முக்கியத்துவம், கண்தானம் செய்ய விரும்புவர் தகுதிகள் பற்றி விளக்கி கூறினார்கள். தொடர்ந்து சேனங்கோடு சுய உதவி மகளிர்களுக்கான CLF கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 50க்கு மேற்பட்டோர்கள் கலந்த கொண்டனர்.



***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

## மனநல நாள் கொண்டாட்டம்

உலக மனநல தினத்தை முன்னிட்டு 2023 அக்டோபர் 10 அன்று மனநலநாள் கொண்டாட்டம் நித்திரவிளை, கருணை இல்லத்தில் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவை நலவாழ்வு பணிக்குழு செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் CTC அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் நிகழ்விற்கு தலைமை தாங்கினார். மாணவர்களின் கலைநிகழ்சிகள் நடைபெற்றது. அனைத்து ஏற்பாடுகளையும் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் அருட்பணி. அஜின் C ஜோசப் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.



## பள்ளி மாணவர்களுக்கான கருத்தரங்குகள்

2023 அக்டோபர் 11 அன்று இதயம் காப்போம் விழிப்புணர்வு கருத்தரங்கு தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பில் கழுவன்திட்டை திருஇருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அருட்சகோதரி சாஜிதா ASMI கருத்துரை வழங்கினார்கள். இதயத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் இதய நோயைத் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கினார். இதில் 300 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

**ஒருநாள் சுற்றுலா**



புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக மாணவ மாணவிகளுக்கான ஒரு நாள் சுற்றுலா 2023 அக்டோபர் 23 அன்று நடைபெற்றது. கன்னியாகுமரி ஆரல்வாய்மொழி போன்ற இடங்களில் நேரம் செலவிடப்பட்டது. இதில் ஏறத்தாழ 30 மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

**வாழ்க்கை வழிகாட்டி முகாம்**

புலரி சமூக சேவை மையத்தில் 29.10.2023 அன்று 10, 11, 12 ஆம் வகுப்பு பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கான வாழ்க்கை வழிகாட்டு முகாம் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட, தக்கலை இளையோர் கல்வி பணியக கருத்தாளர்கள் செல்வன். மனோஜ் செல்வி. ஜெசிலா ஆகியோர் மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த தகவல்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் 50க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு புலரி சமூக சேவை மையத்தின் இயக்குனர் அருட்பணி மகேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். அருட்சகோதரி அல்போன்சா, திருமதி மரிய செல்வம், திருமதி கலாதேவி ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தார்கள்.

**புலரி மாலை நேர வகுப்பு**

கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் கற்றல் தரத்தை உயர்த்த புலரி சமூகசேவை சங்கம் மாலை நேர வகுப்புகளை நடத்தி வருகிறது. தற்போது புதிதாக மீண்டும் ஒரு மாலை நேர வகுப்பு வாஞ்சி நகர் CMC அருட் சகோதரிகள் இல்ல வளாகத்தில் தொடங்கப்பட்டது. முதல் வகுப்பிலிருந்து 8 வகுப்பு வரை ஏறக்குறைய 20 மாணவ மாணவியர் இதன் மூலம் பயன் பெற்று வருகிறார்கள். வகுப்புகளை அருட்பணி. மகேஷ் அவர்கள் வழிகாட்டுதலில் அருட்சகோதரிகள் ஒருங்கிணைத்து நடத்துகிறார்கள்

***செய்தியாளர்***
***திருமதி.அனு கிறிஸ்டி***

# மரியாயின் சேனை தக்கலை கொமித்சியம்

**மறைமாவட்ட செபமாலை பவனி**

அக்டோபர் மாதம் அன்னை மரியாவின் செபமாலையின் மாதம். இம்மாதத்தில் ஒவ்வொரு வருடமும் மரியாயின் சேனை தக்கலை கொமித்சியமானது செபமாலை பவனி நடத்தி வருகிறது. இவ்வருடம் 29.10.2023 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு "அன்பினால் அவனி அமைதியுற" என்ற மைய சிந்தனையோடு அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்திலிருந்து படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயம் வரை நடைபெற்றது. தக்கலை மறை மாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். தக்கலை கொமித்சியத்தின் ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் துவக்க உரையாற்றினார். பொருளாளர் சகோ. பெஞ்சமின் போஸ் அவர்கள் தொடக்க செபம் செய்தார். அதைத்தொடர்ந்து செபமாலை பவனியானது ஆரம்பமானது. சேனையாளர்கள் அனைவரும் செபமாலை செபித்தவாறே பவனியில் கலந்து கொண்டனர். சுமார் 3.30 மணி அளவில் பவனியானது படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தை வந்தடைந்தது தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆன்ம இயக்குனர் அவர்களால் சங்கிலி செபம் சொல்லப்பட்டது. அதங்கோடு புனித மின்னல் மாதா பிரசிடியத்தைச் சார்ந்த சகோதரிகள் இறைவணக்கப் பாடலை பாடினார்கள். துணைத்தலைவர் சகோ ஜினோ அவர்கள் அனைவரையும் வரவேற்றார். குழித்துறை மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்பணி ஒய்ஸ்லின் சேவியர் அவர்கள் அன்னை மரியாவை பற்றியும், செபமாலையின் சிறப்பு பற்றியும் சிறப்புரை ஆற்றினார்கள். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். தலைவர் சகோ தோமஸ் பன்னீர்செல்வம் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். இறுதி செபத்துடன் பொதுக்கூட்டமானது சுமார் 4.30 மணியளவில் இனிதே நிறைவடைந்தது. இந்நிகழ்வில் மறைமாவட்டத்தைச் சார்ந்த ஏராளமான அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் சுமார் 1200 இறைமக்கள் கலந்து கொண்டார்கள். திருப்பவனியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தக்கலை கொமித்சியத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொடர்பாளர் சகோ.ஆன்றணி அனிதா அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

# மறைமாவட்டச் செய்திகள்

## புதிய சமூகநலகூட அடிக்கல் நாட்டுதல் – கயத்தார்

கயத்தாறு மறைபரப்பு பகுதியில் வாங்கப்பட்ட நிலத்தில் புதிதாக இறை இரக்கத்தின் சமூக நலக்கூடம் கட்டப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டுவிழா 2023 அக்டோபர் 3 அன்று மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் மற்றும் விரிவாக்கப்பட்ட மறைபரப்பு பகுதிகளைச் சார்ந்த அருட்தந்தையர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

## மார் மாத்யூ காவுக்காட் நினைவுத்திருப்பலி – சங்கனாச்சேரி

முன்னாள் சங்ஙனாச்சேரி உயர் பேராயர் மார் மாத்யூ காவுக்காட் அவர்களின் நினைவுத்திருப்பலி 2023 அக்டோபர் 09 அன்று காலை 10.00 மணியளவில் அவரது கல்லறையில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் மறையுரை வழங்கினார். மேலும் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தையர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மறைமாவட்ட துறைகளுக்கான கூட்டம்

தக்கலை மறைமாவட்ட அனைத்து துறைகளின் மறைவட்ட இயக்குநர்களின் கூட்டம் தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அதன்படி அக்டோபர் 10 அன்று இளையோர் இயக்கம், இல்வாழ்வு இயக்கம் அக்டோபர் 11 அன்று இறையழைத்தல் ஊக்குவிப்பாளர்களுக்கும் அக்டோபர் 12 அன்று மிஷன் லீக் மற்றும் மறைக்கல்வி நிலையத்திற்கும், அக்டோபர் 11 மற்றும் 13 அன்று குழந்தை ஈசோ இயக்கத்திற்கும் கூட்டம் நடைபெற்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற செயல்பாடுகள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## மருத்துவ முகாம் – கம்பம்

2023 அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை கம்பம் அங்கூர்பாளையம் கிராமத்தில் மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவர் அருள் சேவியர் தலைமையிலான மருத்துவக்குழுவினர் இந்நிகழ்வை வழிநடத்தினர். அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் மற்றும் அருட்சகோதரி எல்சி SH ஆகியோர் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### அருட்தந்தையர் தியானம் – மூலமற்றம்

இந்த வருட அருட்தந்தையர்களுக்கான தியானம் 2023 அக்டோபர் 15 முதல் 20 வரையுள்ள நாட்களில் மூலமற்றம், சினேகவில்லா இல்லத்தில் நடைபெற்றது. தர்மபுரி கார்மல் தியான இல்லத்தைச் சார்ந்த அருட்தந்தை ஸ்டீபன் தச்சில் CMI தலைமையிலான குழுவினர் இந்நிகழ்வை வழிநடத்தினர். மறைமாவட்டத்தைச் சார்ந்த 41 அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் அருட்தந்தை ஜினோய் தொட்டியில் தலைமையில் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.

### இணையவழி அருட்தந்தையர் கூட்டம்

2023 அக்டோபர் 23 அன்று மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான இணையவழி கூட்டம் Google Meet இணையதளம் வாயிலாக நடைபெற்றது. மறைந்த பேரருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல் அவர்களுக்காக ஒருநிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் தந்தை அவர்களின் நல்லடக்க நிகழ்வுகளில் அருட்தந்தையர்கள் உட்பட அதிகமான பங்கேற்பு அளிக்க அனைத்து அருட்தந்தையர்களிடமும் கேட்டுகொள்ளப்பட்டது.

### ஒருநாள் சிறப்பு ஆராதனை

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே அமைதி நிலவ திருத்தந்தையின் அழைப்புக்கு ஏற்ப தமிழக ஆயர் பேரவை 2023 அக்டோபர் 27 வெள்ளிக்கிழமை ஒருநாள் நோன்பு மற்றும் சிறப்பு ஆராதனை நடைபெற்றது. மறைமாவட்டதின் அனைத்து பங்குகளிலும் ஒரு மணிநேர ஆராதனையும், திருத்தந்தையின் அமைதிக்கான செப வழிபாடும் நடைபெற்றது.

### அருட்தந்தையர்கள் கூட்டம் – மறைவட்ட அளவில்

களியல், மஞ்சாலுமூடு, ஆறுகாணி மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் 2023 அக்டோபர் 30 திங்கள்கிழமை காலை 10 மணியளவில் பேணு புனித மரியன்னை ஆலய வளாகத்தில் நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமானது. மறைமாவட்ட பிரதிநிதியாக பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் கலந்து கொண்டார்.

படந்தாலுமூடு, நித்திரவிளை மறைவட்ட அருட்தந்தையர்களின் கூட்டம் 2023 அக்டோபர் 31 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோன்சிலால் அரக்கபறம்பில் மற்றும் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் மறைமாவட்ட பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். இக்கூட்டங்களில் மிஷன் லீக் பேரணி, மறைமாவட்டதின கொண்டாட்டம் மற்றும் மறைவட்ட அளவிலான நிகழ்வுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

**ஆலயத் திருவிழா**

புளியறை, புனித குழந்தை தெரசாள் ஆலயத் திருவிழா அக்டோபர் 1 ஆம் தேதி அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களால் திருக்கோடியேற்றி துவங்கி வைக்கப்பட்டது. 4 ஆம் தேதி 6 பேருக்கு அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் தலைமையில் திருமுழுக்கு மற்றும் திருமணம் புதுப்பித்தல் அருளடையாளங்களும் வழங்கப்பட்டன. அக்டோபர் 8 ஆம் தேதி காலை அருட்பணி ஜோண் ஜோசப் அவர்களால் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு பின்பு அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

**செபமாலை திருப்பவனி**

செபமாலை மாதமான அக்டோபர் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் புளியறை ஆலயத்தில் இருந்து புதூர் புலரி மெட்ரிக் பள்ளிக்கூடம் வரை செபமாலை திருப்பவனி நடத்தப்பட்டது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கி மறையுரை வழங்கினார். தொடர்ந்து சுந்தரபாண்டியபுரம் ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் மந்திரிப்பு நிகழ்வும் நடத்தப்பட்டது.

**சுந்தர பாண்டியபுரம் மறைத்தளம்.**

புதிய மறைபரப்புத்தளமான சுந்தரபாண்டியபுரத்தில் புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுதல் 2023 அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி நடைபெற்றது. அருட்தந்தை ஜோண் ஜோசப் அவர்கள் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். தென்காசி மறைத்தளத்தை சார்ந்த அனைத்து அருட்தந்தையர்களும் இதில் கலந்துகொண்டனர்.



***அருட்சகோதரி. லிபியா CMC***

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

- **திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு**

செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் மாதம் ஒன்றாம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை மாலை 6 மணிக்கு செபமாலை நடைபெற்றது. 22.10.2023 முதல் 28.10.2023 வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது 28.10.2023 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து ஆடம்பர செபமாலை பவனியும் நடைபெற்றது.

- **புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு**

திருப்பணியாளர்களுக்கான அரை நாள் பயிற்சி முகாம் 28.10.2023 அன்று ஆலயத்தில் நடைபெற்றது. அனைத்து திருப்பணியாளர்களும் கலந்து கொண்டனர். பங்குத்தந்தை அவர்கள் பயிற்சியை வழி நடத்தினார். நிறைவில் மதிய உணவு வழங்கப்பட்டது.

## தக்கலை – பிலாங்காலை

- **புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை**

செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 8 வரை திருவிழா மிகச்சிறப்பாக ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. திருவிழாவின் 3 ம் நாள் மேதகு ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி முதல் திருவிருந்து வழங்கினார். 10 ம் நாள் குருகுல முதல்வர் திருப்பலி நிறைவேற்றினார்.

2023 அக்டோபர் 29 ம் தேதி மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட்டது. மிஷன் லீக் மாணவர்களால் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டது. 31 ம் தேதி திருப்பலி மற்றும் ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. 29 ம் தேதி குழந்தை இயேசு இயக்க குழந்தைகள் செய்த அழியாத பொருட்கள் கொண்டு செய்த ஜெபமாலை பங்குதந்தையால் மாதாவுக்கு அணிவிக்கப்பட்டது. இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

- **புனித சூசையப்பர் ஆலயம் – தடிக்காரன்கோணம்**

தடிக்காரன்கோணம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 10 நாள் ஜெபமாலை திருப்பலியுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டு இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

- **புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – வெள்ளாம்பி**

வெள்ளாம்பி புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத் திருவிழா 2023 அக்டோபர் 1 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாறப்பாடி புனித தோமையார் ஆலய பங்குதந்தை அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் திருப்பலி மற்றும் கலைநிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார்.

- **புனித அல்போன்சா திருத்தலம் – நாகர்கோவில்**

நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல ஆலயத்தில் செபமாலை மாதம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. பத்து நாட்கள் உறவியங்கள் அடிப்படையில் ஒவ்வொரு வீடுகளிலும் ஜெபமாலை நடைபெற்றது. இதில் எல்லா மக்களும் கலந்து கொண்டனர்.

2023 அக்டோபர் 29ஆம் தேதி ஜெபமாலை பவனியும் ஜெபமாலை மாதத்தின் நிறைவு நாளும் கொண்டாடப்பட்டது தொடர்ந்து திருமணமாகி 60 மற்றும் 50 ஆண்டுகள் நிறைவு செய்த தம்பதியர்களின் வாழ்த்துக்கூட்டமும் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார்.




- **புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி**

ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயத்தில் ஜெபமாலை மாதம் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்கன்னியர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று ஜெபமாலை ஜெபித்தார்கள். கடைசி 10 நாட்கள் அருட்சகோதரிகள் இல்லத்தில் உள்ள கெபியில் ஜெபமாலை நடைபெற்றது. கடைசி நாளில் ஆடம்பர திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனி மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.

மிஷன் ஞாயிறு 29 காலை திருப்பலி மற்றும் சிற்றுண்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது. மிஷன்லீக் மாணவர்கள் வீடு வீடாக சென்று சேகரித்த பொருட்கள் ஏலமிடப்பட்டது.

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

செபமாலை மாதத்தை முன்னிட்டு 22.10.2023 முதல் 31.10.2023 வரை பத்து நாட்கள் செபமாலை மிகச் சிறப்பாக நடைப்பெற்றது.



29.10.2023 மிஷன் லீக் மாணவர்கள் சிறந்த முறையில் மிஷன் ஞாயிறு கொண்டாடினர். மறைக்கல்வி ஊக்குவிப்பாளர் வருகை புரிந்தார். அவர் மறைக்கல்வி மாணவர்களிடம் மறைக்கல்வி வகுப்புகள் குறித்தும் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

### புனித இரண்டாம் ஜாண்பால் ஆலயம் – குலசேகரம்

குலசேகரம் புனித ஜான்பால் ஆலய திருவிழா அக்டோபர் 20 முதல் 23 வரை சிறப்புடன் நடைபெற்றது. பங்குதந்தை அருட்பணி. ஜோஸ் கானிச்சிகுழியில் அவர்கள் திருக்கொடி ஏற்றி திருவிழாவை துவங்கி வைத்தார். திருவிழா நடைபெற்ற மூன்று நாட்களிலும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. இறுதி நாள் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இறுதி நாளில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் கலை நிகழ்வுகளும் உறவின் விருந்தும் இடம்பெற்றது.

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தில் 2023 அக்டோபர் 02 திங்கள்கிழமை அன்று புனித குழந்தை தெரசா திருவிழாவை முன்னிட்டு சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

செபமாலை மாதத்தை முன்னிட்டு அனைத்து வீடுகளிலும் உறவிய மக்கள் இணைந்து செபமாலை ஜெபிக்கப்பட்டது. கடைசி பத்து நாட்கள் அக்டோபர் 21 முதல் 31 வரை உள்ள நாட்களில் ஆலயத்தில் செபமாலை மற்றும் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. இறுதி நாளாகிய அக்டோபர் 31 அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி ஆடம்பர செபமாலை பவனியும் நடைபெற்றது.

2023 அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை இளையோர் இயக்க பாதுகாவலர், புனித இரண்டாம் ஜான்பால் திருவிழா கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து இளையோர்களின் சிறப்பு ஜெபமும், உறுதிமொழி ஏற்பும் நடைபெற்றது. தொடர்ந்து மார்த்தாண்டம், சுரேஷ்

கண் மருத்துவமனை சார்பில் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. அன்றைய காணிக்கை பவனி, விவிலிய வாசகம் மற்றும் மருத்துவ முகாம்களை இளையோர்கள் முன்னின்று சிறப்பாக செய்திருந்தனர்.

- **இயேசுவின் திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்**

அக்டோபர் 18-ம் நாள் பங்குதந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அவர்களின் பெயர் கொண்ட திருநாளை முன்னிட்டு பங்கு அளவில் அக்டோபர் 15-ம் நாள் கொண்டாடப்பட்டது.

அக்டோபர் 22-ம் நாள் மிஷன் ஞாயிறு மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

அக்டோபர் 29-ம் நாள் மிஷன் ஞாயிறு காணிக்கை உறவியம் வாயிலாக அனைத்து மறைக்கல்வி மாணவ மாணவிகளும் வீடுகளுக்கு சென்று நிதி திரட்டினார்.

## சூசைபுரம்

- **புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்**

அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதம் என்பதனை முன்னிட்டு இம்மாதத்தின் அனைத்து நாட்களிலும் திருப்பலிக்கு முன்னர் ஜெபமாலை சொல்லி ஜெபிக்கப்பட்டது.

அக்டோபர் மாதம் 1 தேதி உறவியங்களின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. மாலை 5.45 மணிக்கு அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து உறவிய ஆண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டது. கொண்டாட்டத்தின் இடையில் தங்களது பெயர் கொண்ட திருவிழாவினை கொண்டாடிய அருட்சகோதரி டீனா மற்றும் அருட் சகோதரி டெஸி ஆகியோருக்கு பங்கு மக்கள் அனைவர் சார்பிலும் வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. பின்னர் அனைவரும் உறவின் விருந்துண்டு மகிழ்ந்து சென்றனர்.



ஜெபமாலை மாதத்தின் இறுதி நாளாகிய அக்டோபர் 31ம் தேதி அன்று மாலை 5.45 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஜெபமாலை பவனி நடத்தப்பட்டது. இதில் சிறியவர் முதல் பெரியவர் வரை

ஏராளமானோர் அன்னை மரியின் பல்வேறு வடிவங்களில் வேடமணிந்து கலந்து கொண்டது சிறப்பாக இருந்தது.

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு பங்கிலும் அக்டோபர் 1 முதல் 31ஆம் தேதி வரை தினமும் மாலை 5.30 மணிக்கு ஆலய வளாகத்திலும், கல்லறை தோட்டம் மற்றும் ஆனக்குழி குருசடி வளாகத்திலும் ஜெபமாலை சொல்லி ஜெபிக்கப்பட்டது. அதுபோல அக்டோபர் 20 ஆம் தேதி தொடங்கி 5 நாட்கள் உறவியங்களின் சார்பில் எல்லா வீடுகளிலும் ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

MARIAN QUIZ. என்ற மரியாவை குறித்த வினாடி- வினாப் போட்டியானது அக்டோபர் எட்டாம் தேதி இரவு 8 மணிக்கு இணையம் வாயிலாக நடைபெற்றது.

அக்டோபர் 3 ம் தேதி புனித குழந்தை தெரசாள் உறவிய ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அக்டோபர் 8 ம் தேதி பங்கு பொதுமன்றம் நடைபெற்றது. அதில் ஆலய திருவிழா குறித்து ஆலோசனையும் குழுக்களின் தேர்வும் நடைபெற்றது. அன்றைய தினம் ஆராதனை துறவற சபை (SABS) மருத்துவ கன்னியர்கள் நடத்திய இலவச மருத்துவ முகாமும் பங்கில் நடைபெற்றது.

அக்டோபர் 22ஆம் தேதி பங்கு இளையோர்கள் பெருஞ்சிலம்பு மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லம் சந்தித்து அவர்களுக்காக ஜெபித்து உதவிகளும் செய்தனர். அவர்களோடு பங்குத்தந்தை அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்களும் வழிகாட்டி அருட்சகோதரி ஜோதிஸ் அவர்களும் உடனிருந்தனர்.

அக்டோபர் 27ஆம் நாள் இரவு 9 மணிக்கு பங்கிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் சகோதர சகோதரிகளுக்காக இணையம் வழியாக ஜெபமாலை ஜெபம் நடத்தப்பட்டது. அக்டோபர் 28 ஆம் தேதி நடைபெற்ற மறை மாவட்ட ஜெபமாலை பவனியில் பங்கின் சார்பில் சுமார் 50 பேர் பங்கேற்றனர்.

- **திருக்குடும்ப ஆலயம் – தக்காளிவிளை**

தக்காளிவிளை திருகுடும்ப ஆலய அர்ச்சிப்பு விழா நினைவு தினமானது 21-10-2023 அன்று சிறப்பு திருப்பலி உடன் கொண்டாடப்பட்டது.

29-10-2023 அன்று மிஷன் லீக் மாணவர்கள் இணைந்து "மிஷன் ஞாயிறு" கொண்டாட்டத்தை கலை நிகழ்வுகளோடு சிறப்பித்தார்கள்.

- **பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்.**

பாத்திமா அன்னை ஆலயத்தில் 1.10.23அன்று அருட்தந்தை மேத்யூ தெற்கேகூற்று அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய

தினம் புனித குழந்தை தெரசாள் புனிதரின் திருவிழா மிஷன் லீக் மாணவர்களால் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குழந்தை ஈசோ இயக்கம் மற்றும் மிஷன் லீக் மாணவர்கள் ஜெபமாலை செய்து 29.10.23 அன்று கொண்டு வந்தார்கள். திருப்பலி முடிந்த பிறகு தாங்கள் செய்து கொண்டு வந்த ஜெபமாலையை தங்கள் பெற்றோருக்கு கொடுத்து மகிழ்ந்தார்கள்.



31.10.23 அன்று உதவி பங்கு தந்தை ஜோஸ்மோன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலி முடிந்த பிறகு ஜெபமாலை கைகளில் ஏந்தி பவனியாக சென்று ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது. இதில் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டார்கள்.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

1.10.2023 அன்று ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு எல்லா உறவியங்களிலும் உள்ள இளையோர்களின் இல்லங்களிலும் இல்லங்களிலும் ஜெபமாலை சொல்லப்பட்டன.

2.10.2023 அன்று மிஷன்லீக் பிள்ளைகளுக்கு சிறப்பு திருப்பலியும் அதைத்தொடர்ந்து றாலியும் நடைபெற்றன.

8.10.2023 அன்று கரியான்குளத்துவிளை புனித குழந்தை தெரசாள் உறவிய ஆண்டு விழா அருட்தந்தை டோஜி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

25.10.2023 மிஷன் ஞாயிறு முன்னிட்டு இன்று மிஷன் லீக் பிள்ளைகள் ஆக்கர் எடுக்க உறவியங்களில் சென்றனர்.

28.10.2023 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நற்கருணை ஆராதனை உடன் உறவிய அடிப்படையில் தொடர் ஜெப மாலையும் அதை தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடை பெற்றன

31.10.2023 அன்று மாலை 5.45 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றன.

- **புனித தோமையார் ஆலயம் – மாதாபுரம்**

02.10.2023 அன்று பங்குதந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்களுடன்

இணைந்து பங்கு மக்கள் புனிதப்பயணம் மேற்கொண்டனர். அக்டோபர் மாதம் செபமலை மாதத்தை முன்னிட்டு 10 நாட்கள் ஆடம்பர ஜெபமாலை நடைபெற்றது. 31.10.2023 அன்று ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

ஜெமாலை மாதத்தை முன்னிட்டு 22.10.2023 முதல் 31.10.2023 வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நவநாள் மற்றும் ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

23-10-2023 அன்று முழுநேர நற்கருணை ஆராதனை நடைபெற்றது. நற்கருணை ஆராதனையில் ஜெபமாலையும், தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

31-10-2023 மாலை 6 மணிக்கு திருப்பலியும், ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. இறுதியில் மரியாயின் சேனை சகோதரிகளால் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்படது

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை**

1.10.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்குப் பின் வின்செந்திய உறுப்பினர்கள் தலைமையில் 'தேசத்தோடு ஒரு நாள்' என்ற மையச் சிந்தனையின் அடிப்படையில் ஆலயம் சுற்றியுள்ள சுற்றுப்புறங்கள் தூய்மை செய்யப்பட்டது. அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் இந்நிகழ்வை துவக்கி வைத்து வின்செந்திய உறுப்பினர்களுடன் உடனிருந்து செயல்பட்டார்கள்.

அக்டோபர் 1 தேதி சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு 2023 அக்டோபர் எட்டாம் தேதி முன்சிறை S. D. கன்னியர் இல்லம் அன்பகத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. டாக்டர் கலைவாணன் அவர்கள் தலைமையில் மேஜிக் ஷோ நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பாட்டிமார்களின் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் பரிசு வழங்கி மகிழ்ந்தனர். பின் அனைவரும் அன்பின் விருந்து உண்டு



மகிழ்ந்தனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கன்னியர் இல்லத் தலைவி அருட்சகோதரி மேரி ராணி SD மற்றும் அருட்சகோதரிகள் ரீமா SD, ற்றெஸி ஜோஸ் SD ஆகியோர் இணைந்து செய்தனர்.

புனித குழந்தை தெரேசா தினமும் மிஷன்லீக் தினமும் சேர்த்து 2023 அக்டோபர் 8 தேதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாணவர்கள் காணிக்கைப் பவனி சிறப்பித்து திருப்பலி ஒப்புக் கொடுத்து ஜெபித்தனர்.

22 ஆம் தேதி முதல் 31ஆம் தேதி முடிய 10 நாட்கள் ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. இறுதி நாள் ஜெபமாலை பவனி நடைபெற்றது. நிகழ்வுகளை உறவிய மக்கள் முன்னின்று வழிநடத்தினர். இறுதியில் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

22ஆம் தேதி மிஷன் ஞாயிறு அன்று மிஷன்லீக் உறுப்பினர்கள் கொடியேற்றி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

- **புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு**

அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதம். அதை மையமாகக் கொண்டு பங்கில் உள்ள எல்லா குடும்பங்களிலும் உறவியம் வாயிலாக ஜெபமாலை நடைபெற்றது. உறவியத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் ஒரு நாள் ஒரு வீட்டில் வந்து கூடி ஜெபமாலை ஜெபித்தனர். அக்டோபர் 22 ஆம் தேதி முதல் 31ஆம் தேதி முடிய 10 நாட்கள் ஆலயத்தில் ஜெபமாலையும் திருப்பலியும் உறவியங்கள் வாயிலாக ஒப்பு கொடுக்கப்பட்டது. அன்பின் விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

---

## இதர செய்திகள்

- கோழிப்போர்விளை, சிக்கார் வளமைய சிற்றாலய அர்சிப்பு 2023 அக்டோபர் 11 இல் ஆயர் தலைமையில் நடைபெற்றது.
- ஆறுகாணி திருக்குடும்ப மறைவட்ட ஆலய கல்லறைத்தோட்ட சிற்றாலயம் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்களால் 2023 அக்டோபர் 31 அன்று மந்திரிக்கபட்டது.
- திருத்தொண்டர் லின்றோ அவர்கள் தனது குருத்துவ படிப்பை நிறைவுசெய்து தற்போது ஆயர் இல்லத்தில் இறைபணி செய்துவருகிறார்.

## MONTHLY AGENDA – NOVEMBER 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 8.00 pm | MJ : Online Bible Quiz Competition |
| 2 | Thu | 10.00 am | Forane Priests Conference ( Soosaipuram, Thuck-Plankalai) |
| 3 | Fri | 9.30 am | KKSSS : INFARM Meeting at Kalluvilai |
| 4 | Sat | 09.30 am | SDS Golden Jubilee celebration @ Manjalumoodu |
| 5 | Sun | 2.00 pm | SMYM : Central Executive meeting @ Thettiyode |
| | | | SMYM : Unit Visit @ Mankarai |
| | | 2.00 pm | CAT : Teachers Training @ Padanthalummoodu |
| | | 2.30 pm | CAT : Diocesan level writing competition @ Padanthalummoodu |
| | | 5.00 pm | MJ : Animators meet @ Kalluvilai |
| 6 | Mon | 9.30 am | Curia meeting @ Bishop's House |
| | | 10.00 am | SINAI : One day Convention @ Vattakottai |
| | | 10.00 am | KKSSS : CRS Assesment at KKSSS office @ Kalluvilai |
| | | 10.00 am | UV: Meeting with Uravium director and Forane directors @ Bishop's House |
| 7 | Tue | 10.00 am | Meeting directors of Laity and Health commission, Vincent De Paul, Legion of Mary, Migrant ministry @ Bishop's House |
| | | 10.00 am | KKSSS : CRS Assesment at KKSSS office @ Kalluvilai |
| 10 | Fri | 9.30 am | FA : Marriage Preparation Course @ Kalluvilai |
| | | 10.00 am | KKSSS :Inter District Drawing & Painting competitions @ Kalluvilai |
| 11 | Sat | 9.30 am | FA : Marriage Preparation Course @ Kalluvilai |

| | | | |
|---|---|---|---|
| 12 | Sun | 02.00 pm | Diocesan day Celebrations @ Padanthalummoodu |
| 13 | Mon | 5.00 pm | Thenkasi Mission meet |
| 14 | Tue | 10.30 am | Extended territory Missionary Meet @ Madurai |
| 18 | Sat | 10.00 am | KKSSS : Awareness Program on Govt. Scheme @ Anjugramam |
| 24 | Tue | 10.00 am | FCC Golden Jubilee Conclusion @ Azhakiyamandapam |
| 19 | Sun | 10.00 am | SMYM : Unit Visit @ Killiyoor, Kaliyal |
| 20 | Mon | 1.30 pm<br>2.00 pm | KKSSS : Drug addiction awareness Campaign @ Malaicode<br>SINAI : One day Convention @ Palappallam<br>KII : Creating Saints Album |
| 21 | Tue | 9.30 am<br>10.00 am | Priest conference @ Sangamam<br>SINAI : One day Retreat @ Kalluvilai |
| 22 | Wed | 9.30 am | Curia meeting @ Bishop's House |
| 23 | Thu | 2.00 pm | Governing Body meeting at Moolamattam |
| 26 | Sun | 08.00 am | CML : Forane Level Rally |
| 28 | Tue | 10.00 am | Presbyteral council meeting @ Sangamam |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

# Diocesan Day Celebration

***Place : Padanthalumoodu***

***Date : 2023 November 12@ 2.00 PM***

# BISHOP'S ENGAGEMENTS - NOVEMBER 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 9.00 am | Bishop's House: Meeting with SJSM Provincial |
| 2 | Thu | | Thuckalay: Bishop's House |
| 3 | Fri | 09.30 am<br>06.00 pm | Kalluvilai : INFARM Meeting at Kalluvilai<br>Kazhuvanthittai: Feast Day Holy Qurbana |
| 4 | Sat | 09.30 am<br>02.00 pm | Manjalumoodu: SDS Golden Jubilee celebration<br>Kaliyikkavilai : Gandhian award function at Nanjil College |
| 5 | Sun | | Bishop's House |
| 6 | Mon | 09.30 am<br>02.30 pm<br>06.30 pm | Bishop's House: Curia meeting<br>Bishop's House: Meeting with Uravium director and Forane directors<br>Marthandam : Kanyakumari Bishops' gathering |
| 7 | Tue | 10.00 am<br>2.00 pm | Bishop's House: Meeting directors of Laity and Health commission, Vincent De Paul, Legion of Mary, Migrant ministry.<br>Sangamam : Sangamam Garments GB meeting |
| 8 | Wed | 10.30 am | >> Guwahati |
| 9 | Thu | 05.00 am | >> Shillong |
| 10 | Fri | 04.00 pm | Shillong : Centenary Celebration of Don Bosco Shillong |
| 11 | Sat | 12.00 pm | >> Trivandrum >> Thuckalay |
| 12 | Sun | 02.00 pm | Diocesean day Celebrations @ Padanthalummoodu |
| 13 | Mon | 05.00 pm | Thenkasi: Mission meeting |

| | | | |
|---|---|---|---|
| 14 | Tue | | Madurai: Extended territory Missionary Meet |
| 15 | Wed | 10.00 am<br>6.00 pm | Pathukani : Marriage Holy Qurbana<br>Marapaddy: Remembrance Holy Qurbana for demised SH sisters and Fr Thomas Muttathukunnel |
| 16 | Thu | 02.00 pm | Mukkoottukkal: Minor seminary visit |
| 17 | Fri | 10.00 am | Varuthattu: Teacher's farewell celebration |
| 18 | Sat | 10.00 am | Azhakiyamandapam : FCC Golden Jubilee Conclusion |
| 19 | Sun | 10.00 am<br>2.00 pm | Palappallam : Feast day Holy Qurbana<br>Reetapuram : Award function (Swami Vallar) |
| 20 | Mon | 6.00 pm | Christurajapuram : Feast day Holy Qurbana |
| 21 | Tue | 09.30 am | Sangamam: Priest conference |
| 22 | Wed | 9.30 am | Bishop's House: Curia meeting |
| 23 | Thu | 10.00 am<br>02.00 pm | Ernakulam : Meeting with V Star Company Managing Director<br>Moolamattam: Governing Body meeting |
| 24 | Fri | 03.00 pm | Thuckalay: Meeting with TNBC Health Commission Secretary |
| 25 | Sat | 6.00 am | Padanthalummoodu : Holy Qurbana at Jyothi Center |
| 26 | Sun | 10.00 am | Sivagangai : Episcopal Ordination |
| 27 | Mon | | Thuckalay: Bishop's House |
| 28 | Tue | 10.00 am | Sangamam: Presbyteral council meeting |
| 29 | Wed | 04.00 pm | Kalluvilai : Karunalayam Silver Jubilee |
| 30 | Thu | | Thuckalay: Bishop's House |

**Dn. Liju Marattukalam, Bishop's Secretary**



Annual Retreat for Priests at Moolamattam, 2023 October 15 - 20



SMYM- St.John Paul Day Celebration at Parish Level (Palapallam) ,2023 October 22



Church Feast - St.John Paul II Church, 2023 October 22



Last Respects to Very Rev. Fr. Thomas Muttathukunnel, 2023 October 25



FCC - Vestition & First Profession at Azhakiyamandapam, 2023 October 28



Pulari - Career Guidance Seminar, 2023 October 29



Pastoral Visit at Karunai Illam, Nithiravilai ,2023 October 30



Pastoral Visit at Nambikkai Alayam, Kazhuvanthittai, 2023 October 31

# இதய அஞ்சலி



## பேரருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குன்னேல்

முன்னாள் குருகுல முதல்வர்

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570